Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No.1 of 2025**
Sessions

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW12(LW17)** |
| Name | : திருமதி.திலகவதி |
| Husband Name | : மணிகண்டன் |
| Village | : தொப்பூர் |
| Taluk | : நல்லம்பள்ளி |
| Calling | : தலைமை காவலர் |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 02.11.2024ம் தேதி சுமார் காலை 11.30 மணிக்கு நான் எஸ்பி அலுவலகத்தில் வரவேற்பாளர் பணியில் இருந்தேன். பென்னாகரம் சமத்துவபுரத்தை சேர்ந்த ஏறுபள்ளியார் என்கிற முனுசாமி மகன் சத்தியமூர்த்தி என்பவர் எஸ்பி அலுவலகத்திற்கு வந்து என்னிடம் எஸ்பி அவர்களை பார்க்க வேண்டும் என்று கூறினார். நான் அதற்கு எதற்காக பார்க்க வேண்டும் என்று கேட்டதற்கு, 01.11.2024 தேதி அன்று இரவு சுமார் 08.15 மணிக்கு அசோக்குமார் என்கிற வேல் என்பவரை சூரி கத்தியால்

குத்தி கொலை செய்துவிட்டேன் என்று சொன்னார். காவல் நிலையத்தில் என்னை தேடி கொண்டிருக்கிறார்கள், அதனால் எனக்கு பயமாக இருப்பதால் எஸ்பி அலுவலகத்தில் சரணடைவதாக சொன்னார். நான் உடனே மேலே உள்ள தனிப்பிரிவு அறைக்கு கூட்டி சென்று அவரை உட்கார வைத்துவிட்டு மாரண்டஹள்ளி காவல் நிலையத்திற்கு சத்தியமூர்த்தி சரணடைந்ததாக சொன்னேன். பின்பு 04.11.2024ம் மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

சத்தியமூர்த்தி எஸ்பி அவர்களை பார்க்க வந்தார். அவர் எஸ்பி யை பார்த்தாரா என்றால் எனக்கு தெரியாது. எஸ்பி அலுவலகத்தில் சத்தியமூர்த்தி வந்து சரணடைந்தது சம்மந்தமாக மாரண்டஹள்ளி காவல் நிலையத்திற்கு தகவல் கைப்பட எழுதி கொடுத்தேன். மாரண்டஹள்ளி போலீசார் என்னை விசாரித்தபோது நான் கைப்பட தகவல் எழுதி கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சத்தியமூர்த்தி எஸ்பி அலுவலகத்திற்கு சுமார் 11.30 மணிக்கு வந்தார். எதிரியை எஸ்பி அலுவலகத்தில் உள்ள அறையில் உட்கார வைத்துவிட்டு நான் பணிக்கு சென்றுவிட்டேன். எதிரி எஸ்பி அலுவலகத்திற்கு வரவில்லை என்றும் அங்கு அவர் சரணடையவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சத்தியமூர்த்தி அசோக்குமாரை கொலை செய்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் தவறு. அரசு தரப்பிற்கு ஏதுவாக நான் வேண்டுமென்றே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>– இல்லை**

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 13.11.2025.

THIRUMAGAL C
Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.11.13 16:16:04 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No.1 of 2025**
Sessions

Deposition of Witness for : **PW13(LW19)**

Name : திரு. மணிகண்டன்

Father's Name : முருகன்

Village : பாலக்கோடு

Taluk : பாலக்கோடு

Calling : முதல்நிலை காவலர்

Age : 36

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 31.10.2024ம் தேதி இரவு 08.30 மணிக்கு மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிந்து நான் ஆய்வாளரின் ஓட்டுனர் என்பதால் நானும் அவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். நான் ஓட்டுனர் என்பதால் வண்டியிலேயே அமர்ந்து கொண்டேன். காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்துவிட்டு அசோக்குமாரின் பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்தார். தனிப்பிரிவில் என்னை ஆஜர் எதிரியை தேடி கொண்டிருந்தோம். அப்போது அவர் எஸ்பி

அலுவலகத்தில் சரணடைந்ததாக தகவல் வந்தது. 01.11.2024ம் தேதி காலை 12.30 மணிக்கு தகவல் தெரிந்தது. நாங்கள் அன்று சென்று தனிப்பிரிவு அலுவலகத்தில் இருந்த ஆஜர் எதிரியை அழைத்து கொண்டு மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கு வந்தோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை 04.11.2024ம் தேதி விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

போலீசார் என்னை விசாரித்தபோது அசோக்குமாரின் மனைவியும் எதிரியும் கள்ள தொடர்பில் உள்ளார்கள் என்று நான் தெரிந்து கொண்ட விவரத்தை போலீசாரிடம் கூறவில்லை. காவல் ஆய்வாளர் சீனிவாசன் என்பவர் சத்தியமூர்த்தியை அழைத்து வர சென்றார். குற்ற வழக்கில் எதிரியை கைது செய்ய எழுத்துமூலமாக எவ்வித கடிதமும் கொடுக்கவில்லை, வாய்மொழியாக கூறியதன் பேரில் நான் சென்று அழைத்து வந்தேன். எதிரி எஸ்பி அலுவலகத்தில் சரணடையவில்லை என்றும் நாங்கள் எதிரியை அழைத்து வந்ததாக சொல்வதும் தவறு. வழக்கிற்கு ஏற்றவாறு என்னை வேண்டுமென்றே சாட்சியாக உட்படுத்தி அரசு தரப்பிற்கு ஏற்றவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 13.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.13 16:16:12 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.

Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered
Sessions

Case No. **S.C. No.1 of 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW14(LW20)** |
| Name | : திரு. சதிஷ்குமார் |
| Father's Name | : ராமசந்திரன் |
| Village | : பாப்பாரப்பட்டி |
| Taluk | : பென்னாகரம் |
| Calling | : உதவி மருத்துவர் |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவர் பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 02.11.2024 அன்று மகேந்திரமங்கலம் காவல் நிலையம் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் அசோக்குமார், 38 வயது, த/பெ. முனிராஜ் என்பவரின் பிரேதத்தை சவக்கூராய்வு செய்வதற்காக திரு.அம்சராஜ் முதல்நிலை காவலர் 1930 என்பவரால் வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு

பிரேதத்தை அடையாளம் காணப்பட்டது. உடல் முழுவதும் விரைப்பு தன்மை காணப்பட்டது.

<u>வெளிப்புற காயங்கள்</u>

1) 3x2xதோளின் ஆழம் தெரிந்த வெட்டு காயம் வலது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது.

2) சுமார் 2x1x குழியின் ஆழம் தெரிவதற்கான குத்து காயம் வலது பக்க வயிற்று பகுதியில் காணப்பட்டது.

3) சுமார் 2x1x5 cm அளவிலான குத்து காயம் இடது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது.

4) சுமார் 1x1xதோள் ஆழம் தெரியும் அளவிற்கான வெட்டு காயம் வலது பக்க மூக்கில் காணப்பட்டது.

5) 1x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் இடது பக்க மார்பு பகுதியில் காணப்பட்டது.

6) 3x1xதசையின் ஆழம் தெரியும் அளவிற்கான வெட்டு காயம் வலது பக்க மேல் உதட்டில் காணப்பட்டது.

7) 3x1x5 cm அளவிலான குத்து காயம் இடது பக்க கழுத்து பகுதியில் காணப்பட்டது.

8) 1x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் இடது முன்கையில் காணப்பட்டது.

9) 1x1 சதையின் ஆழம் தெரியும் அளவிற்கான வெட்டு காயம் சிறு விரலில் காணப்பட்டது.

உள்புற காயங்கள்

1) விலா எலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டன

2) இருதயம் சாதாரண நிலையிலும், இருதயத்தில் திரவ நிலையில் காணப்பட்டது.

3) நுரையீரல் சாதாரண நிலையிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

4) குரல்வளை நாவடி எலும்பு சாதாரண நிலையில் காணப்பட்டது.

5) இரைப்பையில் சுமார் 3x1x தசையின் ஆழம் தெரியும் அளவிற்கு வெட்டு காயம் காணப்பட்டது, குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

6) ஈரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சாதாரண நிலையிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

7) வயிற்று பகுதியில் சுமார் 800 மில்லி லிட்டர் அளவிலான இரத்தம் திரவ நிலையிலும் 100 கிராம் அளவிலான இரத்தம் கட்டிகளாகவும் காணப்பட்டன.

தலை மற்றும் கழுத்து பகுதி உடற்கூராய்வு விவரங்கள்

1) மண்டை ஓட்டு எலும்புகள் ஜவ்வுகள் நல்ல நிலையில் காணப்பட்டன.

2) மூளை சாதாரண நிலையில் காணப்பட்டது. குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

3) முதுகு தண்டவடத்தில் c6,c7 எலும்புகள் உடைந்த நிலையில் காணப்பட்டன.

மேற்படி பிரேத பரிசோதனை கருத்து விவரமானது மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட குத்து காயங்களின் விளைவாகவும் அதிகப்படியான

இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் ஒரு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதனால் அவர் இறந்திருக்க கூடும் என்று சான்றிதழ் வழங்கியுள்ளேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

இறந்த அசோக்குமார் மருத்துவமனைக்கு கொண்டுவரும்போது உயிருடன் இருந்தாரா என்ற குறிப்புகள் அ.சா.ஆ.8ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனைக்கு முன்பாக மருத்துவ குறிப்புகள் பொதுவாக இருக்கும், அதனை நான் பார்க்கவில்லை. விபத்து பதிவேட்டு நகலை பார்த்துவிட்டு பிரேத பரிசோதனை அறிக்கையும் பார்த்து அதன் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. இறந்த நபர் மது குடித்திருந்தாரா என்பது பற்றி விபத்து பதிவேட்டு நகலில் விவரம் கண்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் அதனை பொதுவாக நாங்கள் பார்க்க மாட்டோம். பிரேத பரிசோதனை செய்யும்போது ஆய்வாளர் அங்கு இருந்தாரா, கத்தியை காண்பித்து அது தொடர்பாக என்னிடம் விசாரணை எதுவும் மேற்கொண்டாரா என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை. பிரேத பரிசோதனை முடித்து 20 நாட்கள் கழித்துதான் போலீசார் என்னை விசாரித்தார்கள். இடைப்பட்ட காலத்தில் கத்தியை காண்பித்து எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. கூர்மையான ஆயுதத்தில் தாக்கப்பட்டதாகத்தான் என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையில் கூறியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தி

கூர்மையாக உள்ளது என்றால் சரிதான். அந்த கத்தி **எ.சா.பொ.1**. தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கத்தியானது கூர்மையாக உள்ளது. ஆனால் அதன் மேல் பகுதி சிறிது தட்டையாக அந்த அளவிற்கு கூர்மையாக இல்லை என்றால் சரிதான். எ.சா.பொ.1 கத்தியானது மிக கூர்மையாக உள்ளது, அதில் குத்தியிருந்தால் நான் என்னுடைய பிரேத விசாரணையில் சொல்லப்பட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். சா.பொ.1 காரணமாக அசோக்குமார் இறந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் தவறு.

மறு விசாரணை– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 13.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.13 16:16:22 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.